[1991 செப்டம்பர் 27

(இ) வேலூர் மத்திய சிறையிலிருந்து செங்கற்பட்டு நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்படும்போது இரு கைதிகள் (இலங்கைத் தமிழர்கள்) தப்பித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற அரசு, போலியான அரசு என்றும், ஆயுதப் புரட்சிகள் தாரீர் என்றும், நக்சலைட்டுகள் என்றும் கோவையில் ஆங்காங்கே துண்டுப் பிரசுரங்களை வைத்து நிதி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பல இடங்களில் இன்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நக்சலைட்டுகளுக்கு ஆதரவாக, 'மனஓசை' என்ற பத்திரிகையும், 'கேடயம்' என்ற பத்திரிகையும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது கைதிகள் தப்பித்துப் போனது பற்றி. அதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சிறையிலிருந்து நேற்று இரண்டு கைதிகளை சென்னைக்குக் கோர்ட்டுக்கு அழைத்து வந்தபொழுது, கோர்ட்டிலே ஆஜர்படுத்திவிட்டு, மீண்டும் வேலூருக்கு அழைத்து செல்லுகிறபோது, இரண்டு மர்ம ஆசாமிகள் மோட்டார் சைக்கிளில் காத்திருந்து, அந்த இருவரையும் அப்படியே கடத்திச் சென்றதாக இங்கே பத்திரிகையில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன, இப்படி இலங்கைக் கைதிகள் தப்பி ஓடியிருக்கிற நிலை உண்மையிலேயே தமிழகத்தினுடைய காவல்துறைக்கு ஒரு சவாலாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை உடனடியாக நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சினைப் பற்றி திரு. சிங்காரம் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதைப் பொருள் தடுப்பு வழக்கு ஒன்றில் தொடர்புடைய இலங்கைத் தமிழர்களான குணரத்தினம் என்கிற ராஜா, ஜெகதீசன், செல்வராயன், உதயகுமார் என்கிற நான்கு குற்றவாளிகள் காவல் நீட்டிப்பிற்காக வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து 17.9.91 அன்று செங்கற்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டனர். அப்போது குற்றவாளிகளில் ஒருவரான உதயகுமார் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபரின் உதவியுடன் தப்பித்து விட்டார். இது தொடர்பாக காவல் பணியில் கவனக் குறைவாக இருந்த ஆயுதப்

படைப் போலீசார் நான்கு பேர் 18.9.91 அன்று தற்காலிக் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று போதைப் பொருள் தடுப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து காவலில் இருந்த இலங்கைத் தமிழர் நந்தகுமார் என்பவரும், அவருடன் வேறு வழக்கில் சம்பந்தப் பட்ட விசாரணைக் கைதி கந்தசாமி என்பவரும் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டக் காவல் துறையினால் காவல் நீட்டிப்புக் காக 25-9-91 அன்று வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து சென்னை 8 ஆம் எண் சிட்டி செசன்ஸ் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

முற்பகல் 10-40

நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்து மாலை 4.15 மணியளவில் வெளியே வரும்போது நந்தகுமார் அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறித் தப்பிவிட்டார். இது தொடர்பாக எஸ்பிளனேட் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டு விசாரணையில் உள்ளது. சம்பந்தப்பட்ட காவலர்களும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இரு சம்பவங் களையும் ஒட்டி தப்பி ஓடிய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சி தமிழ்நாடு எங்கும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க காவல் துறை இயக்குநருக்கு உத்தரவுகளை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) வடலூர் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மூடப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் அவதியுறுவது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி, திரு. கு. சிவசுப்பிரமணியன் ஆகியோர் தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் மூடப்பட்டிருக்கிற ஒரு தொழிற்சாலைத் தொழிலாளர்கள் படும் அவதி குறித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் பெற அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது; திரு. வே. தம்புசாமி.

* திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் உள்ள சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற்சாலை கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக மூடிக் கிடக்கிறது. அதிலே பணியாற்றுகிற ஏறத்தாழ 1,600 தொழிலாளர்கள் வெளியே தள்ளப்பட்டு அந்தக் குடும்பங்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முதலாளி, தொழிலாளர் சட்டங்களை எல்லாம் மீறிக் கொண் டிருக்கிறார். மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறக்கக் கோரி அந்தத் தொழிலாளர்கள் சங்கச் செயலாளர் தலைமையில் கடந்த